[979 ஏப்ரல் 23]

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

76. அருள்மிகு சப்தரிஸ்வரர் ஆலயம், இலால்குடி.
77. ,, கல்யாணபசுபதீஸ்வரர் ஆலயம், கரூர்.
78. ,, வெங்கட்ரமணசுவாமி ஆலயம், தாந்தோனிமலை.
79. ,, வேதநாராயண பெருமாள் ஆலயம், திரு நாராயணபுரம்.
80. ,, உத்தமர் கோயில், பிச்சாண்டார்கோயில்.
81. ,, சுப்ரமணியசுவாமி ஆலயம், குமார வயலூர்.
82. ,, கலியுக வரதராசர் ஆலயம், கல்லங்குறிச்சி.
83. ,, காமவேதீஸ்வரர் ஆலயம், திருமங்கலம்.
84. ,, மத்யார்சுஜேஸ்வரர் ஆலயம், பேட்டை வாய்த்தலை.

இணைப்பு X.

[........ 384..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 976-க்கான விடையைக் காண்க.]

விஞ்ஞானக் கல்வியும், தொழிற்கல்வியும், பல்கலைக் கழகங்களில் விரைந்து வளர்ந்து வருங்கால், நுண்கலைகளையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற உயர்ந்த திட்டத்தின் அடிப்படையாக, பல்கலைக்கழக மானியக்குழு பல்வேறு கலாச்சாரத்துறைகளில் செம்மல்களை (Fellows) நியமனம் செய்ய வேண்டும் என்று கருதியது. அத்தகைய எட்டு கலாச்சார செம்மல் நியமனங்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களான மதுரை-காமராஜ் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் மேற்படி திட்டம் நடைமுறையில் இல்லை.

கலாச்சார செம்மல்களை நியமிக்கும் திட்டத்தில் செயல்முறையாவது.

1. நான்கு செம்மல்களடங்கிய ஒரு குழு ஒவ்வொருவரும் மூன்று திங்கள் என்ற விகிதத்தில் ஓராண்டு பணிபுரிவது.

2. மாத ஊதியம் ரூ. 3,000மும் இலவசப் பயணச் சலுகையும் தருவது.

[1979 ஏப்ரல் 28

3. செம்மல்களாக நியமிக்கப்படுபவர்களுக்கு பல்கலைக் கழக பட்டம் பெற்றிருக்க வேண்டுமென்றோ, உயர்ந்த கல்வித் தகுதியுடையவராயிருத்தல் வேண்டுமென்றோ கட்டாயம் இல்லை. அவர்கள் சார்ந்துள்ள துறையில் மேம்பட்டவர்களாயிருக்க வேண்டுமென்பதையே ஒரே தகுதியாக நிர்ணயிக்க வேண்டியது.

4. செம்மல்கள் பல்கலைக் கழகத்துடன் அல்லது பல்வேறு துறைகளுடன் பணியாற்றுங்கால், அவர்கள் பல்கலைக் கழகத்தின் உள்ளேயே இருக்கவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. உயர் மட்டக் கலைஞர்கள் தங்கள் பணிக்காலத்தில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள ஏதுவாக இருக்கும் வகையில், பணியிடத்திற்கான விதிகளை தளர்த்திக்கொள்வது.

மேற்கண்ட செயல்முறைகளின்படி கீழ்க்கண்ட நான்கு துறைகளின் செம்மல்கள் நியமம் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1. இசைத்துறை.
2. பண்டைய வரலாறு மற்றும் தொல்பொருளாய்வுத்துறை.
3. இந்திய வரலாற்றுத் துறை.
4. மரபார்ந்த பண்பாட்டுத் துறை.

இந்நான்கு துறைகளின் பரிந்துரைப்படி, சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நடப்பாண்டுக்கு, கீழ்க்கண்ட நான்கு உயர்ந்த கலைஞர்களை, நான்கு துறைகளில், மூன்று மாதங்களுக்கு செம்மல்களாக நியமனம் செய்துள்ளது:

1. இந்திய இசை (வாய்ப்பாட்டு)	திரு. சீர்காழி எஸ். கோவிந்தராசன்.
2. இந்திய இசை (கருவி)	திரு. எஸ். பாலச்சந்திரன் (வீணை).
3. கோயில் கலை ..	திரு. கணபதி ஸ்தபதி.
4. சமயவுரை (கதாகாலட்சேபம்)	திரு. கிருபானந்த வாரியார்.

மேலே குறிப்பிட்டுள்ள நான்கு கலைஞர்களும் செம்மல்கள் நியமனம் ஏற்றுப் பணியாற்ற இசைந்துள்ளனர். திரு. சீர்காழி எஸ். கோவிந்தராசன் அவர்கள் 20—9—1978 அன்றும், திரு கணபதி ஸ்தபதி 3—10—1978 அன்றும் முறையே இந்திய இசைத்துறையிலும் பண்டை வரலாற்று மற்றும் தொல் பொருளாய்வுத் துறையிலும் செம்மல்களாக சேர்ந்துள்ளனர்.